**BSNL ஊழியர் சங்க அமைப்பு தின வாழ்த்துக்கள்**



மத்திய அரசின் துறையாக இருந்த தொலை தொடர்பு துறை ஆட்சியாளர்களின் புதிய தாராளமயக் கொள்கைகள் காரணமாக பொதுத்துறை நிறுவனமாக, BSNLஆக மாற்றப்பட்ட போது, KG போஸ் அணியாக அதுவரை செயல்பட்டு வந்த நாம் BSNL ஊழியர் சங்கமாய் விசாகப்பட்டினத்தில் உருக்கொண்டோம்.

முதல் சங்க அங்கீகார தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்த போதும் நாடு முழுவதும் பரவிய சங்கமாய் உருப்பெற்றோம்.

இரண்டாம் சங்க அங்கீகார தேர்தல் துவங்கி சமீபத்தில் நடைபெற்ற ஏழாவது சங்க அங்கீகார தேர்தல் வரை ஆறு முறையும் பெரும்பான்மை BSNL ஊழியர்களின் ஆதரவு பெற்ற சங்கமாய் பரிணமித்தோம்.

ஆறு முறை தொடர் வெற்றி.. இது சாதனை… சாதித்ததற்கான காரணம் என்ன?

ஊழியர்களின் உரிமைகளுக்காக சமரசமில்லா போராட்டம்….

அரசின் ஊழியர் விரோத கொள்கைகளுக்கு எதிராக தொடர் போராட்டம்….

BSNLஐ தனியார் மயமாக்கும் அரசின் முயற்சிகளுக்கு எதிராக தளர்வின்றி போராட்டம்……

புனித கோவில்களாம் பொதுத்துறை நிறுவனங்களை அழிக்க நினைக்கும் அரசின் முயற்சிக்கு எதிராக இந்திய நாட்டின் ஒன்று பட்ட தொழிலாளி வர்க்கத்தோடு இணைந்த போராட்டம்….

வாடிக்கையாளர் மகிழ்விப்பு வாரம், மாதம், வருடம், எப்போழுதும் என புதியதாய் ஒரு திட்டம்….

புன்னகையுடன் கூடிய சேவை என வாடிக்கையாளர் மனம் குளிர ஒரு திட்டம்…..

ஆக்டோபஸ் ஜியோ வந்தாலும் எங்கள் BSNLஐ தாழ விடோம் என உறுதியோடு ஒரு மணி நேர கூடுதல் பணி என்று அற்புதமாய் ஒரு திட்டம்….

கொண்டு வந்து BSNLஐ காப்பதோடு,,,,,,

01.01.2017 முதல் நல்லதொரு ஊதிய உடன்பாடு காண எஃகு போன்ற உறுதி…….

கொண்டதிந்த சங்கம் என ஊழியர்கள் கூத்தாடுவதாலேயே இந்த தொடர் வெற்றி… தொடரும் இந்த வெற்றி…

**ஊழியர் நலனுக்காக…. BSNL நிறுவனம் காத்திட… பொதுத்துறை காத்திட…**

**22.03.2017 BSNL ஊழியர் சங்கத்தின் 16ஆவது அமைப்பு தினம்**

**BSNL ஊழியர்கள் அனைவருக்கும், BSNL ஊழியர் சங்க அமைப்பு தின வாழ்த்துக்கள்**